[1978 மார்ச் 27

திருச்சிக்கும் திருவண்ணாமலைக்கும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினரால் இரண்டு மாவட்டப் பேருந்துகள் ஓட்டப்பட்டு வருகின்றன. இத்தடம் பெரம்பலூர், தொழுதூர், வேப்பூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு வழியாக இயக்கப்படுகிறது.

திருவண்ணாமலைக்கும், வேலூருக்கும் போளூர் வழியாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகமும், தனியார் பேருந்துகளும் போதுமான அளவு இயங்கி வருகின்றன. இந்நிலையில் திருச்சிக்கும் வேலூருக்கும் மூங்கில்துறைப்பட்டு வழியாக விரைவுப் பேருந்துகள் இயக்க வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : ஆய்வு செய்கிறோம் என்று சொல்லுகிறார்களே, எங்கு எப்படி ஆய்வு செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : போக்குவரத்துக் கழகங்களில் ஆய்வு செய்வதற்காக டிராபிக் எஞ்சினியரிங் செல் என்ற பிரிவு இருக்கிறது. 'ஆக்குபன்சி ரேஷியோ' என்பதை அனுசரித்து அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுகிறது.

அரூரிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

* 680 வினா—**திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூரிலிருந்து பெங்களூருக்கும், சென்னைக்கும் விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. எம். அண்ணாமலை : அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு வட்டப் பகுதிகளும் ரயில் போக்குவரத்தற்ற பகுதியாகும். அங்குள்ள பெரும்பான்மையான சிறு வியாபாரிகள் சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களுக்குச் சென்று வியாபாரம் செய்வதில் பெரும் சிரமம் இருக்கிறது. ஆகவே, சென்னையிலிருந்தும் பெங்களூரில் இருந்தும் அரூர் வழியாகப் பேருந்து விட்டால் நல்ல வசூல் ஆவதோடு அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் அபிலாஷையையும் பூர்த்தி செய்ததாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா ?

1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரூருக்கும், பெங்களூருக்கும் இடையே உள்ள தூரம் 175 கிலோ மீட்டரே இருக்கும் காரணத்தால் விரைவுப் பேருந்து விட இயலாது. தற்சமயம் தினசரி அரூர் வழியாகக் கோவையிலிருந்தும், சென்னையிலிருந்தும் இரண்டு விரைவுப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. இது தவிர அண்ணா போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மாவட்டப் பிரிவும் முறையே சேலத்திலிருந்து அரூர் வழியாக திருவண்ணாமலைக்கும், திருவண்ணாமலையிலிருந்து சென்னைக்கும் சாதாரணப் பேருந்துகளை இயக்கி வருகின்றன. எனவே, விரைவுப் பேருந்து தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அரூருக்கும் பெங்களூருக்கும் இடையே பேருந்து விடுவது பரிசிலனையில் உள்ளது.

Micro-nutrition contents in soils.

* 621 Q.—THIRU S. M. VASAN & THIRU V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether any research into the availability of Micro-nutrition in the soils in Tamil Nadu has been undertaken in recent times; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) 1970 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட ஆராய்ச்சிகள் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :

(1) பயிர்களில் நுண்சத்துக்கள் குறைவாய் தோன்றும் அறிகுறிகளைக் கண்டறிதல்.

(2) பயிர்களுக்குத் தேவையான நுண் சத்துக்களின் அளவுகளை அறுதியிடல்.

(3) முக்கிய பயிர்களுக்கு நுண் சத்துக்களால் தீங்கு ஏற்படாத வரம்பைக் குறிப்பிடல்.

(4) நுண் சத்துக்கள் அடங்கிய மண்ணிலும் பயிர்களிலும் மீண்டும் நுண் சத்துக்களை ஊட்டும்பொழுது அம்மண்ணும் பயிரும் அச்சத்துக்களை ஏற்கும் தன்மையை அறிதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS